**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 505** **நாள்: 23.09.2026**

**“வளர்ந்து வரும் சுகாதாரம் மற்றும் பருவநிலை சவால்களிலிருந்து சென்னையைப் பாதுகாத்தல், விலங்குவழி நோய்கள், பருவமழை தயார்நிலை மற்றும் கல்லூரி மாணவர்களிடையே பேரிடர் அபாயக் குறைப்பு” என்ற தலைப்பில் லயோலா கல்லூரியில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை கூடுதல் தலைமைச் செயலாளர்/அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி இயக்குநர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று தொடங்கி வைத்தனர்.**

இன்று (23.09.2026) சென்னை லயோலா கல்லூரியின் (தன்னாட்சி) விலங்கியல் மற்றும் உயிரி தொழில்நுட்பவியல் முதுகலை மற்றும் ஆராய்ச்சித்துறையின் சார்பில் “வளர்ந்து வரும் சுகாதாரம் மற்றும் பருவநிலை சவால்களிலிருந்து சென்னையைப் பாதுகாத்தல், விலங்குவழி நோய்கள், பருவமழை தயார்நிலை மற்றும் கல்லூரி மாணவர்களிடையே பேரிடர் அபாயக் குறைப்பு” என்ற தலைப்பில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை கூடுதல் தலைமைச் செயலாளர்/அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி இயக்குநர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, கூடுதல் தலைமைச் செயலாளர்/அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி இயக்குநர் அவர்களும், மாநகராட்சி ஆணையாளர் அவர்களும், விலங்குவழி நோய்கள், பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் சுகாதாரம், பருவமழை தயார்நிலை மற்றும் பேரிடர் ஆபத்து குறைப்பு ஆகிய தலைப்புகளில் ஆராய்ச்சி கட்டுரைகள் அடங்கிய மாநாட்டின் ஆய்வு மலரினை வெளியிட்டு, லயோலா பேரிடர் பாதுகாப்புப் படையினை (LDSF) தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சி, பருவநிலை மாற்றம், புதிதாக பரவும் தொற்று நோய்கள், சுற்றுச்சூழல் சுகாதாரம் மற்றும் பேரிடர் ஆபத்து குறைப்பு போன்ற ஒன்றோடொன்று தொடர்புடைய சவால்கள் குறித்து விவாதிக்க மூத்த அரசு அதிகாரிகள், மருத்துவ மற்றும் கால்நடை மருத்துவ வல்லுநர்கள், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை நிபுணர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து நடைபெற்றது.

லயோலா பேரிடர் பாதுகாப்புப் படை (LDSF) என்பது பேரிடர் தயார்நிலை, அவசரகால நடவடிக்கை, பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் சமூக மீள்தன்மைக்கான மாணவர் தலைமையிலான ஒரு தளமாகக் கருதப்படுகிறது; மாணவர்கள் தங்களது கல்வித் தகுதிகளுடன்

தொழில்முறை திறன்களையும் சான்றிதழ்களையும் பெற இதன் மூலம் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில், புதிதாக உருவெடுக்கும் சுகாதாரம் மற்றும் பருவநிலை சவால்களை எதிர்கொள்வதில் தயார்நிலை, பொறுப்புள்ள குடியுரிமை மற்றும் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் முக்கியத்துவம் குறித்தும், வெள்ளப்பெருக்கு, நிவாரணப் பணிகள், பேரிடர் தயார்நிலை மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் போது பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து பணியாற்ற மாணவர்கள் தொடர்புடைய திறன்களையும் நிபுணத்துவத்தையும் வளர்த்துக் கொள்ளவும், மாணவர்கள் விழிப்புடனும், தகவல்களை அறிந்தவர்களாகவும், புதிதாக பரவும் நோய்கள் குறித்த விழிப்புணர்வுடன் இருக்கவும், தரமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், அறிவியல் ரீதியாக நம்பகமான சுகாதாரச் செய்திகளைத் தங்களது குடும்பங்களுக்கும் சமூகங்களுக்கும் கொண்டு சேர்க்கும் சுகாதாரத் தூதர்களாக செயல்படவும் வலியுறுத்தப்பட்டது.

இந்த கருத்தரங்க நிகழ்ச்சியானது, மாணவர்களை சம்பவங்கள் நடந்த பின் செயல்படும் முறையிலிருந்து விலகி, தடுத்தல், தயார்நிலை, விரைவான நடவடிக்கை மற்றும் மீள்தன்மை கொண்ட ஒரு நிலையான கலாச்சாரத்தை நோக்கி நகர வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டியது. வளர்ந்து வரும் சுகாதாரம் மற்றும் பருவநிலை ஆபத்துகளை எதிர்கொள்ள கல்வி நிறுவனங்கள், அரசுத் துறைகள், சுகாதார அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள், அறிவியல் நிறுவனங்கள் மற்றும் சமூகங்களுக்கு இடையே வலுவான ஒத்துழைப்பை இது வலியுறுத்தியது.

பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் பருவநிலை மீள்தன்மை கொண்ட சென்னைக்கு விழிப்புணர்வுள்ள குடிமக்கள், திறமையான இளைஞர்கள், ஒருங்கிணைந்த நிறுவனங்கள் மற்றும் வலுவான தயார்நிலைக் கலாச்சாரம் தேவை என்ற தெளிவான செய்தியுடன் கருத்தரங்கம் நிறைவடைந்தது.

மாணவர்களை வெறும் கற்பவர்களாக மட்டுமல்லாமல், எதிர்கால சுகாதாரத் தூதர்களாகவும், பேரிடர் மீட்பு தன்னார்வலர்களாகவும், ஆராய்ச்சியாளர்களாகவும், பொறுப்புள்ள சமூகப் பங்காளிகளாகவும் நிலைநிறுத்தியுள்ளது.

இந்நிகழ்வில், லயோலா கல்லூரி முதல்வர் அருட்தந்தை முனைவர் ஏ. லூயிஸ் ஆரோக்கியராஜ், தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித்துறை இயக்குநர் (பொ) முனைவர் வி. லோகநாயகி மற்றும் இந்திய வானிலை மைய விஞ்ஞானி முனைவர் வி.ஆர்.துரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

பெருநகர சென்னை மாநகராட்சி